## பியகம பிரதேச சபை

----------------------------

## கம்பஹா மாவட்டம்

---------------------------

### 1. நிதிக் கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 08 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து பியகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

---

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான நூலக இருப்பு மதிப்பீட்டின் போது ரூபா 101,098 பெறுமதியான 1216 புத்தகங்கள் இருப்பு மதிப்பீட்டு சபையினால் பாவனைக்குதவாது என அகற்றப்பட்ட போதும் மீளாய்வாண்டு வரை கணக்குகளில் இருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் மேல் மாகாண உள்;ராட்சி ஆணையாளர் திணைக்களத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட போட்டோன் பக்கோ மற்றும் போட்டோன் லொறி ஒன்றினது உண்மையான பெறுமதிகள் கணக்குகளில் காட்டப்படாமல் அதன் காப்புறுதி மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 19,695,000 கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 450,860 பெறுமதியான கருவிகளும் உபகரணங்களும் பெறுமதி மற்றும் ரூபா 345,835 பெறுமதியான ஏனைய உபகரணங்களும் மீளாய்வாண்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 நவம்பர் 13 இல் ரூபா 14,398,398 பெறுமதியில் கல் ஏதண்ட சேபால மயானத்திற்கான மின்சார பிரேத எரியூட்டும் இடம் கட்டிமுடிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் காணி கட்டட கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) சென்மதியாக காட்டப்பட்ட ரூபா 6,748,289 பெறுமதியான தொகை தொடர்பிலான விபரங்களை ஆராயப்படாமல் உள்ளுராட்சி ஆணையாளருடைய அனுமதி பெறப்படாமலும் நாட்குறிப்பின் இல 52 நாட்குறிப்பின் பிரகாரம் திரண்ட நிதிக்கு சீர்செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2015 ஜனவரி 01 ஆந் திகதி கிடைக்கவேண்டிய கைத்தொழில், வணிக வரி மற்றும் குரு செவன விடுதிக்கான வாடகை முறையே ரூபா 1,330,860 மற்றும் ரூபா 269,760

ஆகியன காணப்பட்டுள்ள போதிலும் 2015 ம் வருடத்திற்கு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்த தொகையான ரூபா 26,410,282 பெறுமதியான நடவடிக்கைகளுக்கான போதிய கணக்காய்வு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 88,209,496 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 25,624,929 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானங்கள் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானங்கள்

சபை செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உண்மை வருமானம், மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|
| ஆதனவரி | 66,843 | 72,775 | 51,061 |
| வாடகைகள் | 4,190 | 2,491 | 4,078 |
| உரிமங்கள் | 2,736 | 688 | 3,759 |

#### 2.2.2 ஆதனவரி

2015 திசெம்பர் 31 இல் ஆதனவரி நிலுவையாக காட்டப்பட்டிருந்த ரூபா 51,061,827 பெறுமதி 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாக ரூபா 12,478,121 உம் 3-5 வருடங்களுக்கு கிடைக்கப்பட வேண்டிய வருமான நிலுவை ரூபா 27,656,193 நிலுவையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 கைத்தொழில் மற்றும் வியாபார வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2015 ஆம் ஆண்டில் கைத்தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 453 வியாபாரங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும்

மீளாய்வாண்டு வியாபார உரிமைக் கட்டணங்கள் அறவிடுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பாக தெல்கொட உப அலுவலக எல்லைக்குள் 1673 நிலையங்களுக்கான ரூபா 1,330,860 பெறுமதியான நிலுவையும் மற்றும் கடவத்த உப அலுவலகத்தின் எல்லைக்குட்பட்ட ரூபா 772,200 பெறுமதியான நிலுவையும் 5 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த வியாபாரத் தளத்திற்கான பரீட்சிப்பின் பிரகாரம் குறிப்பிட்ட வியாபார நிலையம் மற்றும் உரிமையாளர்களின் விபரம் இல்லையெனவும் செயலாளரினால் 2016 யூன் 29ல் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 வாடகை**

---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) தெல்கொட உப அலுவலக எல்லைக்குள் தனிநபர் காணியில் சபையினால் வாடகைக்கு எடுக்கப்பட்டு பின் அதனை மீன்சந்தை, இறைச்சிக்கடை மற்றும் சந்தை நடாத்துவதற்காக கேள்வி கோரப்பட்டு மூன்றாம் நபருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கான சபைக்கு கிடைக்கவேண்டிய ரூபா 1,654,612 பெறுமதியான வாடகை அறவிட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட வர்த்தக இடத்திற்கு மேற்கொண்ட பரீட்சிப்பின் பிரகாரம் அந்த இடத்தில் அந்தப் பெயரில் உள்ள குறிப்பிட்டப்பட்ட நபர்கள் இல்லாதபடியால் கிடைக்கவேண்டிய வாடகை பெறமுடியாதுள்ளது என செயலாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசம்பர் 31 இல் சபைக்கு கிடைக்கவேண்டிய வியாபார வரிகளின் பெறுமதி ரூபா 5,712,265 இல் கடவத்தை சந்தை தொகுதிக்காக கிடைக்கவேண்டிய வாடகைத் தொகை ரூபா 2,041,689 பெறுமதியானது 5 வருடங்களுக்கு மேற்பட்டதாகவும் மற்றும் ரூபா 2,668,432 பெறுமதியானவை 1-5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாகவும் உள்ளது.

(இ) பிரதேச சபைக்கு சொந்தமான வியகம பண்டாரவத்தை துரு செவன சந்தைத் தொகுதிக் கடைகள் 2012 ஆம் ஆண்டில் உடைக்கப்பட்டு இல்லாதொழிக்கப்பட்ட போதும் அவற்றில் 22 கடையில் 11 - 46 மாதம் வரை கிடைக்கவேண்டிய கடை வாடகையானது ரூபா 343,700 ஆகக் காணப்படுகின்றது ஆயினும் வருமானத்தினை அறவிட எந்தவிதமான நடவடிக்கையும் 2016 யூன் 08 வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இத்தொகுதியினது வீதி அபிவிருத்தி செய்யும் போது வீதி அதிகாரசபை அபிவிருத்தி அதிகாரசபையினால் அகற்றப்பட்டமையால் அவற்றிற்கான இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்டு 2013 இல் சபைக்கு அவ் இழப்பீடு ரூபா 1,500,000 கிடைக்கப்பெற்றது என செயலாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1980 திசெம்பர் 31 இல் உள்;ராட்சி ஆனையாளரின் 1980/46 ஆம் இலக்க கடை வாடகை கொடுப்பதற்கான சுற்றறிக்கையின்படி குறைந்தது 5 வருடங்களுக்கு ஒரு தடவை கடை வாடகை மீள மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் கடவத்தை உப அலுவலகத்திற்கு சொந்தமான பொதுச்சந்தையில் உள்ள 58 கடைகளுக்கான இறுதி கடை வாடகை விலை மதிப்பீடு 2008 ஆம் ஆண்டிற்கு பின்னர் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம்**

------------------------------

2011 ஜனவரி 13 ஆந் திகதி மேல் மாகாண வருமானவரி ஆணையாளரின் இலக்கம் மேமா.ஃவரு.ஃஆணை.ஃபொது கடிதத்தின் பிரகாரம் 1994 ஆம் ஆண்டு இலக்கம் 04 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் தண்டணை வழங்கும் சட்டத்தின்படி மேல் மாகாணத்தில் உள்ள நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டப்பணம் பிரதேசசபை செயலாளரினால் அவ்வருடத்தில்

விதிக்கப்பட்ட தண்டப்பணம் திசெம்பர் 31 திகதியில் இருந்து 5 வருடத்திற்குட்பட்டவற்றை அறவிட நீதிமன்ற பதிவாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் சான்றுப்படுத்திய பத்திரம் பெறப்பட்டு அப்பத்திரத்துடன் மேல்மாகாண வருமான ஆணையாளரிடம் கோரப்பட வேண்டிய போதிலும் சபையின் செயலாளரினால் இவற்றிற்காக ஒழுங்குகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 தொலைத்தொடர்பு கோபுரக்கட்டணம்**

-----------------------------------------------

சிறிலங்கா சோசலிச குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 இலக்க விசேட சுற்றறிக்கையின் பிரகாரம் உப பிரிவு ஏ இன் (3வது கட்டளை) படி சபை எல்லைக்குள் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களை இனங்கண்டு கட்டணம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 இல் கடவத்த மற்றும் மாகொல உப அலுவலகத்தில் ஏழாவது கோபுரம் இனங்காணப்பட்டிருந்த போதும் சுற்றறிக்கைப்படி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------

**3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

------------------------------------------------------------------------------------

பிரதேச சபைக்கு சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றும் மற்றும் லான்மாஸ்ரர் இரண்டும் 10 வருடத்துக்கு மேலாக பயன்படுத்தப்படாது எந்தவித நடவடிக்கையுமின்றி களஞ்சியத்தில் பழுதடைந்த நிலையில் பராமரிப்பின்றி காணப்படுகின்றது மற்றும் குப்பை ஏற்றும் ரைக்ரர் ரெயிலர் ஒன்று தற்காலிகமாக குப்பைகள் ஏற்றும் இடத்தில் பராமரிப்பின்றி இருந்தமையை 2016 யூன் 08 ந்திகதி பௌதீக பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

சபைக்கு சொந்தமான 9 உழவு இயந்திரங்கள், 4 முச்சக்கரவண்டி, மற்றும் 4 மோட்டார் சைக்கிள் ஆகியன போதியதாக சபையில் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டில் சுகாதார, வீதி, மற்றும் மின்னியல் பிரிவுகளுக்கு வாடகை அடிப்படையில் 8 உழவு இயந்திரங்களும், 1 ரிப்பரும், 1 லொறியும் மற்றும் 4 முச்சக்கரவண்டியும் அமர்த்தப்பட்டு அதற்காக ரூபா 7,219,150 பெறுமதியான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 முறைகேடான கொடுக்கல் வாங்கல்**

---------------------------------------------------

(அ) திட்டமிடல் கூட்டத்திற்கு பங்குபற்றுபவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு ரூபா 376,700 மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்த கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை உறுதிப்படுத்தும் வருகைக் குறிப்பு அறிக்கையில் வேறுபாடு இருந்தது. (வருகை குறிப்பு அறிக்கையின்படியும் கைரேகை வருகைக்குறிப்பு இயந்திரப்படியும் வேறுபாடு காணப்பட்டது.) மற்றும் கைரேகை இயந்திரத்தில் கையொப்பம் இடப்பட்டிருக்காமலும் இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 4 ஏக்கர் 3 றூட் 2.7 பேச் அலுவலகம் இருந்த காணியை பிரிப்பதற்கான திட்டம் அனுமதிக்கும் போது பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1996 ஆகஸ்ட் 6 ஆந் திகதிய 935.⁚.6 இலக்க சுற்றறிக்கையின் அறிவித்தலின் 22(1) கட்டளைப்படி மக்களின் பொழுதுபோக்கு மற்றும் பொதுப்பாவனைக்காக காணியின் மத்தியில் 10 வீதம் ஒதுக்கப்பட்டு அதற்கான காணி அனுமதிப்பத்திரத்தை சபைக்கு வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 யூன் 08 ஆந் திகதிய பௌதீக பரீசீலனைத் திகதிவரை அவ்வாறான நடைமுறை காணப்பட்டிருக்கவில்லை..

(ஆ) காணி பிரிக்கும் திட்டத்தின் படி பின்வரும் அபிவிருத்திகள் செய்யப்பட இருந்தபோதும் 2016 யூன் 8 ஆந் திகதி பௌதீக பரீட்சிப்பின் போது அவ்வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

(i) நீர்,மின்சார வசதிகள் வழங்கல்.

(ii) நீர் வடிகாலமைப்பு மேற்கொள்வதற்கு கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதும் வீதியின் ஒரு பக்கம் மட்டுமே இடப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டுள்ளது மற்றும் வீதிக்கு கொங்கிரீட் அல்லது தார் இடப்படாமலும் காணப்பட்டிருந்தது.

(iii) வீதிக்கு மேல் கொங்கிரீட் கல் இடப்பட்ட போதும் அவை மழை நீரில் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(iv) பொது நோக்கிற்கான நல்ல நிலையான காணியை ஒதுக்கி வைக்க வேண்டி இருந்த போதும் லொட் இலக்கம் 20,37,55 ஆகிய 3 இடத்தில் பேச்சர்ஸ் 57.6 ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதில் பேர்ச் 10.6 ஆகிய லொட் இல 20 காணித்துண்டில் மட்டும் கொங்கிரீட் கல், சுற்று மதில் செய்யப்பட்ட போதும் பேர்ச் 37 க்குள் உள்ள லொட் இல - 37 இல் காணித்துண்டு பள்ளமாகவும் முக்கோண காணியாகவும் இருந்தது. இதனால் 3 இடங்களில் பொதுநோக்கிற்காக ஒதுக்கிவைத்திருந்த அந் நோக்கத்திற்கு பயன்படுத்த முடியவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது.

(v) தொழில்நுட்ப உத்தியோகத்தர், வேலை அத்தியட்சகர் ஆகியோர் இந்தக்காணி எவ்வளவிற்கு அபிவிருத்தி செய்தது என பற்றி சிபார்சு செய்யப்பட்டிருந்தது. செயலாளரினால் 2016 மார்ச் 31 இல் இந்தக்காணி பிரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(vi) கம்பஹா காணிப்பதிவாளர் அலுவலகத்தில் 2016 யூன் 15 ஆந் திகதி எடுக்கப்பட் தகவல்களின் படி காணியில் 5 துண்டுகளுக்கு கூட்டு மொத்த விற்பனைப் பெறுமதியான ரூபா 16,214,000 காட்டப்பட்டிருந்தபோதிலும் இதன்படி சபைக்கு கிடைக்கவேண்டிய 1 வீதம் வரி ரூபா 162,140 பெறுமதியாக இருந்தபோதும் சபையினால் பாதீட்டு பெறுமதியான ரூபா 54,285 மட்டுமே பெறப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) 100 நாள் விசேட வேலைத்திட்டத்தின் படி கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டமிடலில் பகல வியன் வில நகனகிர பின்தாலிய வீதியின் மதகு திருத்தம், பகல வியன் வில நகனகிர பொது மண்டபம் திருத்தம் மற்றும் பியகம வட்டகிர சமகி நலச்சேவை சங்கத்தின் கீழ்த்தளம் கட்டுமானம் ஆகிய 3 திட்டங்களுக்கு மதிப்பீடு தயாரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் அமைக்கப்பட்டமையால் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி இல - பிய/4/5/கம்.நா.வா./2015 ஆகிய பியகம பிரதேச செயலரின் கடிதத்தின் பிரகாரம் அந்தத்திட்டம் இல்லாதொழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 100 நாள் விசேட வேலைத்திட்டத்தின் படி கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டமிடலின் சில வீதிகள் 2, 3 நாட்களில் கொங்ரீட் இடப்பட்டு முடிக்கப்பட்டிருந்தது. அந்த வீதியின் தரம் பற்றி சந்தேகத்திடமாக கணக்காய்வில் காணப்படுகின்றது.

உதாரணம் - தெல் கொட அளுபோவில கொட்டாச கேன வீதி கொங்ரீட் அமைத்தல், தரணகம கனத்த வீதி கொங்ரீட் அமைத்தல் ,கல்வல வீதி கீழ் துண்டு 350 மீற்றர் கொங்ரீட் அமைத்தல்.

### 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மை

(அ) 2015 மார்ச் 17 ஆந் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் ஜெனரலின் கடிதத்தின் படி 2010, 2011 வருடங்களுக்காக வரி செலுத்த வேண்டிய வரி தொகையான ரூபா 1,580,069 அறிவித்திருந்த போதும் அவை செலுத்த வேண்டியது தொடர்பில் 2015 டிசம்பர் 31 வரைக்கும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது அரச பெறுகை வழிகாட்டி இலக்கம் 4.3.1 பந்தியின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு செய்யப்படாமலும் அத்துடன் பொருளுக்கான விலை கோரலின் போது அதற்கான விபரணக்குறிப்பிடப்படாமலும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த கோரலின் போது இழிவான விலையை தெரிவு செய்யாமல் எந்தவித ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களையும் வழங்காது வேறு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டதால் ரூபா 61,889 நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) 2016 மார்ச் 1 ஆந் திகதிய அரச பெறுகை வழிகாட்டி இலக்கம் 4.2.1 பந்தியின் பிரகாரம் குறைந்தளவு 3 வருடத்திற்கு தேவையான முழுமையான பெறுகைத்திட்டம் மற்றும் அடுத்த வருடத்திற்கான விபரமான பெறுகைத்திட்டம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 திண்மக் கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) குப்பைகள் பிரித்தெடுத்து கூட்டெரு தயாரிப்பதற்கான இடம் கட்டுவதற்காக 4 ஏக்கர் 2 றூட் 12.35 பேர்ச் அளவுடைய மண் அகற்றப்பட்ட தரிசு நிலக்காணியை கொள்வனவு செய்வதற்காக 2014 ம் ஆண்டில் சபை அனுமதியை எடுத்த பின்னர் அதற்காக பத்து மில்லியன் ஒதுக்கி வைத்துள்ளனர். 2014 ம் வருடத்தில் இக்காணி கொள்வனவுக்காக உள்;ராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதியை கோரியிருந்தனர். இதன் போது 2014 செப்தெம்பர் 01 ம் திகதியில் விண்ணபத்தில் காணப்பட்ட குறைபாடான காணியின் மொத்த பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கான சான்றுகளை பெறுவதற்கு 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி இக்காணி மதிப்பீடு செய்வதற்கு வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும் மதிப்பீட்டறிக்கை 2016 பெப்ரவரி 11 ஆந் திகதியே கிடைக்கப்பெற்றிருந்தது. ஆனாலும் இக்காணி எடுப்பதற்கு 2015 ம் ஆண்டு பாதீட்டில் காசு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இக்காணி கொள்வனவு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது குப்பை சேகரிப்பதற்கான நடவடிக்கையை தனியாருக்கு ஒப்பந்தமாக வழங்கப்பட்டிருந்தது. சபையின் உழவு இயந்திரம், மற்றும் வாடகைக்கு பெற்றுக்கொண்ட உழவு இயந்திரம் மூலமும் கொண்டுவரப்படும் குப்பைகள் சபைக்கு பின்னால் உள்ள இடத்தில் பறிக்கப்படுகின்றது. மற்றும் ஒப்பந்ததாரருடைய வாகனத்தில் குப்பைகளை சபை மூலமாகவே ஏற்றிவிடப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் அவ்விடத்தில் இருந்து குப்பை எடுக்கும் போது ஒவ்வொரு லோட்டுக்கும் ரூபா 11,900 கொடுக்கப்பட்டது. குப்பைகளை எடுப்பது சபைக்கு வருமானமாக காணப்பட்டபோதும் 2016 யூன் 08 ஆந் திகதிய கணக்காய்வு பரீட்சிப்பின் போது குப்பைகள் அழிப்பதற்காக ரூபா 30,238,460 செலவிடப்பட்டிருந்தது.

(இ) சபை அலுவலகக் கட்டட தொகுதிக்கு அருகில் போடப்படுவதனால் துர்நாற்றம் அலுவலகத்திற்கும், சபைக்கு அருகில் உள்ள வீடுகளுக்கும் வீசுவதனால் சூழல் பிரச்சனைகளை முகங்கொடுத்திருந்த போதிலும் சபைக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் சபைக்கான எரிபொருள் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது.

(ஈ) சில வருடங்களாக குப்பைகள் எடுக்கும் நடவடிக்கைக்காக ஒரே நடைமுறையே பின்பற்றியிருந்தனர். ஆனாலும் குப்பைகள் எடுக்கும் இடத்திலே குப்பைகள் பிரித்தெடுத்தல் செய்யப்பட வேண்டிய போதும் சபைக் கட்டட தொகுதியில் இருந்து நாளாந்தம் எடுக்கப்படும் குப்பைகளும் பிரித்தெடுத்தல் செய்வதற்கான நடவடிக்கைகளும் 2016 யூன் 09 ஆந் திகதி வரைக்கும் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் குப்பைகள் அழிப்பதற்காக ரூபா. 30,238,460 செலவழித்தனர். அதில் ரூபா 23,037,550 பெறுமதியானவை சபை கட்டடத்திற்கு அருகாமையில் போட்டு வேறு இடத்திற்கு எடுப்பதற்காக செலவிடப்படுகின்றமை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. (76 வீதம் )

(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய 2011 யூலை 5 ம் திகதிய இலக்கம் 1713/11இ இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட சுற்றறிக்கை ஐஏ (அ) பிரிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக உபபிரிவு 22 வது பந்தியின் பிரகாரம் கூறப்பட்ட செயற்பாடுகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல், மற்றும் கட்டுப்படுத்தவும் சபையினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானக் கட்டுப்பாடு

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

(ஊ) மனித வள முகாமைத்துவம்

(எ) வாகனப் பயன்பாடு